**மன்னார் நகர சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 15 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் நகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**(அ)** சபையின் கணக்கறிக்கையின் ஐந்தொகையில் காட்டப்பட்ட சொத்துக்களின் பெறுமதியானது சொத்துக்களின் விபரப்பட்டியலின் பிரகாரமான பெறுமதியை விட ரூபா 129,141 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**(ஆ)** மீளாய்வாண்டின் கணக்கறிக்கையில் மீள்பாவனைக்கு ஏற்புடையதல்லாத மற்றும் 3 வருடங்களிற்கு மேலாக பழுதடைந்து திருத்தம் செய்யப்படாத ரூபா 14,289,000 வாகனங்களின் கொள்விலை பெறுமதியில் சொத்துக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் நிலையான சொத்து ரூபா 14,289,000 ஆல் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**(இ)** மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட காணி கட்டிடம் ரூபா 264,900,000 மற்றும் பதவியினர் கடன் ரூபா 10,540,852 இற்குமான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நிதி ஒழுங்குவிதி | |
| (i) நிதி ஒழுங்குவிதி 371 மற்றும் மாகாண நிதி ஒழுங்குவிதி 219 | 24 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக நகர சபையின் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வெளித் தரப்பினர்களுக்கும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா. 1,723,204 அறிக்கையிடும் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 571 | ரூபா 1,034,168 பெறுமதியான வைப்புக்கள் நீண்டகாலமாக வைப்புக் கணக்குகளில் தீர்க்கப்படாத மீதிகளாக காணப்படுகின்ற போதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ந்து காணப்படுகின்றது. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 104 | சபையின் சாரதியிடம் 2016 ஆம் ஆண்டு கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் ரூபா 5,985 வரவு வைக்கப்பட்டுள்ளது, எனினும் அவ் அலுவலருக்கு எதிராக 25/06/2017 வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நகரசபை கட்டளைச் சட்டம் | |
| அத்தியாயம் (255) 160 | நகரசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2016 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 4,144,365 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 27,014,174 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவீனத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 22,760,511 ஆகவும் விளைந்திருந்தது

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம; (ரூபா) | உண்மை வருமானம; (ரூபா) | நிலுவை (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| வீதவரிகள் | 1,260,000 | 1,301,281 | 41,281 | 3 |
| வாடகைகள் | 19,521,400 | 24,981,997 | 5,460,597 | 28 |
| உரிமங்கள் | 3,055,000 | 3,593,588 | 538,588 | 18 |
| சேவை கட்டணங்கள் | 1,750,000 | 1,733,134 | (16,866) | (1) |
| குற்றப் பணங்கள், தண்டப் பணங்கள் | 310,000 | 573,630 | 263,630 | 85 |
| ஏனைய வருமானம் | 1,955,000 | 3,595,150 | 1,640,150 | 84 |
| அரசிறை மானியங்கள் | 60,515,150 | 50,723,150 | (9,792,000) | (16) |
| **மொத்தம்** | **88,366,550** | **86,501,930** | **(1,864,620)** | |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2007 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட வேண்டிய ரூபா 32,490,400 தொகையான முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

**(அ)** வாடகை நிலுவையாக 2016 ஆம் ஆண்டுக்கான வாடகை நிலுவையில் ரூபா 6,631,556 ஆனது 25/06/2017 வரை அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை.

**(ஆ)** கிறிஸ்துமஸ் பண்டிகைக்கால தற்காலிக நடைபாதை வியாபாரக் கடைகள் வாடகைக்கு விடப்பட்டதனை தெரிவுச் செவ்வை அடிப்படையில் செயற்பாடுகள் மீதான கணக்காய்வுக்கு உட்படுத்தியதில் 17 கடைக்காரர்களினால் ரூபா 253,149 வருமான இழப்பு நகரசபைக்கு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் 25/06/2017 வரை 04 நபர்களிடம் இருந்து ரூபா 18,750 மட்டுமே அறவீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**(அ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 03 தொலைத் தொடர்பு நிறுவனங்களின் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் அந் நிறுவனங்களின் கோபுரங்களிற்கு அனுமதிக்கப்பட்ட வரி சபையினால் இதுவரை அறவிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களிற்கு குறித்த கோபுரங்கள் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து கணக்காய்வுத் திகதியான 25 ஜூலை 2017 வரை மாதாந்த வரி அறவீடு செய்வதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் இழப்பு ஏற்படுவதற்கு, வருமான அறவீட்டு அலுவலர்களினதும், செயலாளரினதும் கவனயீனமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**(இ)** சபையின் கணக்குகளில் Roller, Tipper மற்றும் JCB வாடகை நிலுவையாக 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 19,500 அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனம்**

**(அ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தலைப்புகளிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 1,903,780 செலவினங்களின் ஒதுக்கீடுகள் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபையில் செயலாளர், உள்ளகக் கணக்காய்வாளர், விடய அலுவலர்கள் மற்றும் வருமான பரிசோதகர்கள் காணப்படுகின்ற போதிலும் நிர்வாக வினைத்திறன் இன்மையால் வருமானங்களை அறவீடு செய்வதில் தொய்வு நிலை காணப்படுகின்றது.

**(இ)** சபையில் உள்ள வருமானப் பரிசோதகர்கள், அலுவலகப் பணியாளர்களிற்கு சீருடைப்படி வழங்கப்படுகின்ற போதிலும் அலுவலர்கள் தமது சீருடைகளைப் பயன்படுத்துவதில் மந்த நிலை காணப்படுகின்றது.

**(ஈ)** நகர சபை மன்னாரில் 25 பாவனைக்கு உதவாத மற்றும் திருத்தி பாவிக்க முடியாத வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அவை தொடர்பான கடந்த 03 வருடங்களிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** நகர சபை மன்னாரிடம் யுனொப்ஸ் நிறுவனத்தினால் மழை நீர் வெளியேறுவதற்காக வடிகால்கள் 2016 ஜனவரி மாதத்தில் இருந்து கையளிக்கப்பட்ட போதிலும் அவற்றை முறையாக பராமரிக்கவில்லை.

**(ஊ)** நகரசபை மன்னாருக்கும் பிரதேச சபை மன்னாருக்குமிடையே சீர்செய்யப்பட வேண்டிய நிலுவைகள் காணப்பட்ட போதிலும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அவற்றை தீர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

2016 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் 08 ஆளணிக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் பாதிப்படைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

**(அ)** சபையின் எல்லைப்பரப்பில் இருந்து சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படாமையால் கொம்போஸ்ட் மற்றும் மீள்சுழற்சி முறை செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் திருப்தியின்மை காணப்படுகின்றது.

**(ஆ)** சபையின் எல்லைப் பரப்பில் இருந்து சேகரிக்கப்படும் குப்பை கூழங்களை முழுமையாக கொம்போஸ்ட் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் பெரும்பாலான குப்பை கூழங்கள் எரிக்கப்படுகின்றது. இதனால் நகரசபை மன்னாரின் திண்மக்கழிவு முகாமைத்துவம் பேணப்படும் இடத்தைச் சுற்றியுள்ள மக்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

**(இ)** நகரசபை மன்னாரில் நிரந்தர மற்றும் தற்காலிக சுகாதாரத் தொழிலாளிகள் மிகையாகக் காணப்படுகின்ற போதிலும் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவு அகற்றுவதில் சீரற்ற நிலை காணப்படுகிறது.

**4. நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்**

-----------------------------------------------

**4.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

----------------------------------

**(அ)** இறுதிக் கணக்குகளுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ)** நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு அறிக்கை**

----------------------------

மத்திய அரசு பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்திய படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கவேண்டியருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை சபையினால் செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------

**(அ)** மீளாய்வாண்டில் மாகாண கணக்காய்வு இரு முறை மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருப்பதால் வருடம் முழுவதற்குமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றி கணக்காய்வில் அறியமுடியாதுள்ளது.

**(ஆ)** கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆம் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ)** ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும் அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

-------------------------------

நகர சபை மன்னாரில் 03 வருடத்திற்கு உட்பட்டு பழுதான ஆனால் திருத்தி மீள் பாவனைக்கு உட்படுத்தக் கூடிய 10 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) பெறவேண்டிய முற்பணம்

(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

(உ) அலுவலக முகாமைத்துவம்